பாடலைத் தொடர்ந்தே சென்றேன்...21.

( By. விசாலி ஸ்ரீராம் )

1965 இல் வந்த "பூமாலை"திரைப்படத்திலிருந்து

ஒரு தாலாட்டு

.மாயவநாதன் வரிகளுக்கு ஆர்.சுதர்சனம் அவர்கள் இசையில் சுசில்லாம்மா பாடிய பாடல்.

....பெற்ற தாய்,அவள் பெற்ற குழந்தை மற்றொருத்தியின் மடியில்..தாயாருக்கு தன உறவை சொல்லிக் கொள்ளமுடியாத சூழ்நிலை....

மற்றொருத்திக்கு, குழந்தையின் தாய் அங்கேயே இருப்பது தெரியாமல் குழந்தையை பாடி உறங்கவைக்கிறாள்....பாட்டாக பெற்றவளை வசைபாடி முடிக்கிறாள்.

பூமாலை படத்தில் அழகான சாருகேசி ராகத்தில் அமைக்கப்பட்ட இந்தப் பாடல் அம்மாவின் தாலாட்டுப் பாடல்களில் ஒரு மைல்கல்.

டகரம்...அம்மாவிடம் அழகு நடனம் புரியும்..."கட்டை விரல் வெல்லக்கட்டி உன் கன்னம் ரெண்டும் தங்கக் கட்டி.....பெற்றெடுத்த தாய்க்கு நீ கசந்த எட்டி.....சிரிப்பாய் எந்த சிங்கக்குட்டி......எத்தனை ட்....டன்னாபாருங்கள்....

ஒவ்வொன்று ஒவ்வொருஉணர்ச்சிக்கொத்து....இனிப்பு,மினுமினுப்பு,கசப்பு....பாசம் அதுவும் சிங்கக்குட்டியாம்...

அவளுக்கு குழந்தை இல்லை....அதை"பூவில்லை காயில்லை,கனியைக்கண்டேன்...உலகத்துக்கு நான் ஒரு புதிரானேன்...புகையுண்டு நெருப்பில்லை என்பது போல் உலகம் என்னை தூற்றினாலும் எனக்கு அதனால் கவலையில்லை......ஆராரோ பாடுகிறாள்..".ஒரு உவமையாய்"....இந்த உவமையைப் பாடும்பொழுது ஓராயிரம் உணர்சிகளை உள்ளடக்கி பாடியிருப்பார்கள்.பத்து மாதம் சுமக்காமல் எனக்கு உன்னிடம் உள்ள உரிமை உன்னைப் பெற்றவளுக்குக் கூட இல்லையென்று பெற்றவள் முன்னமே கொஞ்சிக் குலவுகிறாள்.

கொன்று குவிக்கின்ற கொடிய புலி கூடத் தன குட்டியை வெறுப்பதில்லை...ஆனால் அழகுப் பெட்டகமாகிய உன்னை விட்டு விலகிப்போயிருப்பதனால் அவள் பெண்தானா இல்லை பேய் இனத்தவளா....பெண்குலத்துக்கே அவள் ஒரு அவமானச் சின்னமடா என்று வசைபாடி.....பாசத்துடன் ஆராரோ பாடி உறங்கவைக்கிறாள்.

இந்தப் பாடல் முழுவதுமே தாயன்பைக் கொட்டித் தீர்த்திருப்பார்கள்.

வரிகளின் வலிமைக்கு குரலின் இனிமை கொஞ்சம் ஆறுதல்....

அதில் இரண்டு தாய்க்கும் பொருந்துமாறு உணர்ச்சிகளை மாற்றி மாற்றிப் பாடி இருப்பார்கள்.

சாதாரணமாகவே தாலாட்டு என்றாலே இனிமை....

அதில் இனிமையே தாலாட்டுப் பாடினால்....குழந்தை மட்டுமா உறங்கும்....பூ உறங்கும்,பொழுதுறங்கும்....மான் மயில் எல்லாம் உறங்கும்....நாம் மட்டும் என்ன....நாமும் அயர்ந்து உறங்கிவிடுவோம்....சுசீலாம்மா பாடிய தாலாட்டிலே இது ஒரு அருமையான பாடல்....பெற்றவளாக விஜயகுமாரியும்,வளர்ப்பவளாக அஞ்சலிதேவியும் அருமையாக நடித்திருக்கும் இந்தப் பாடல் இதோ உங்களுடன் http://www.youtube.com/watch?v=SUctqfL6U_I

கட்டை விரல் வெல்லக்கட்டி Kattai viral vella katti

Visit me at http://asokarajanandaraj.blogspot.com/
YOUTUBE.COM

LikeLike · · Share · 132

- Aravind Karthik, Rajeswari Narayanan and 11 others like this.
  - **Ramamurthy Subbayan** மிகவும் அருமை..
    September 22 at 7:27am · Like
  - **Ramakrishnan CR** very nice, akka...naan adhigam kaettiraadha paadal....
    September 22 at 9:45am · Like